# நோயாளிக்குத தகவல்

## சிகிச்சை மருந்து:

# உயர் இரத்த அழுத்தம்

டையூராடிக்ஸ்



Medicine To Treat: Hypertension - **Diuretics**

## டையூராடிக்ஸ் மருந்து எதற்குப் பயன்படுத்தப்படுகிறது?

இந்த மருந்து உடலிலுள்ள அளவுக்கு அதிகமான தண்ணீர் மற்றும் உப்புகளை சிறுநீரகங்கள் வெளியேற்ற உதவுகிறது. உடலில் உள்ள தண்ணீர் குறைவதால், இரத்தக் குழாய்ச் சுவர்கள் மீதான அழுத்தத்தையும் இதயத்தின் வேலைப் பளுவையும் இது குறைக்கிறது. செயலிழந்த இதயத்தை இயக்கும் பணியில் நுரையீரல்களிலிருந்து வெளியாகும் திரவக் கசிவுகளைக் குறைக்கவும் இந்த மருந்து பயன்படுத்தப்படுகிறது.

## டையூராடிக்ஸ் சாத்தியமான பக்கவிளைவுகள் யாவை?

- சிறுநீரகங்கள் மூலம் உப்பை அதிக அளவில் டையூராடிக்ஸ் வெளியேற்றுவதால் நீங்கள் அடிக்கடியும் அதிக அளவிலும் சிறுநீர் கழிக்க நேரலாம்.
- குறிப்பாக, படுத்திருந்த அல்லது உட்கார்ந்த நிலையிலிருந்து நீங்கள் எழும்போது கிறுகிறுப்பு, தலைசுற்றல் ஏற்படலாம். பெரும்பாலும் காலை நேரத்தில் இப்படி நிகழலாம்.
- உங்களுக்கு பலவீனம். களைப்பு, வழக்கத்திற்கு மாறான தாகம் ஆகியவற்றுடன், தசைச் சுளுக்கு அல்லது பசியின்மையும் ஏற்படலாம். இவை அளவுக்கு அதிகமான பொட்டாசிய உப்பு இழப்பின் அறிகுறிகள்.
- உங்களுக்கு தோல் சொறி, சினைப்பு ஏற்படலாம் அல்லது சூரிய வெப்பம் ஒத்துக் கொள்ளாது போகலாம்

## எத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கையை நான் எடுக்க வேண்டும்?

- நீங்கள் உட்கொள்ளும் மருந்து உங்களுக்கு பொட்டாசிய இழப்பை ஏற்படுத்தலாம். உங்கள் மருத்துவர் பொட்டாசியம் குளோரைட் போன்ற பொட்டாசிய மாற்றை பரிந்துரைத்தால் உங்கள் மருந்துடன் தவறாமல் அதையும் சேர்த்து உட்கொள்ளுங்கள்.

*குழந்தைகளுக்கு எட்டாத இடத்தில் மருந்துகளை வைத்திருங்கள்*

- பொட்டாசிய மாற்று எதையும் நீங்கள் உட்கொள்ளாவிட்டால் பொட்டாசிய சத்து நிறைந்த உணவை கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளுங்கள். உதாரணமாக புதிய ஆரஞ்சுப் பழச்சாறு, வாழைப்பழம், அன்னாசி மற்றும் உலர்ந்த திராட்சை ஆகியவை.

## பொதுவாகப் பயன்படுத்தப்படும் டையூராடிக்ஸ் மருந்துகள் யாவை?

- ஹைட்ரோகுளோரோதியாஸைட்

- ஃபுருஸிமைட்

## நான் ஒருமுறை மருந்தை பயன்படுத்த மறந்து விட்டால் என்ன செய்வது?

- அவ்வாறு மருந்தை உட்கொள்ள மறந்தால் உங்களுக்கு நினைவு வந்தவுடன் உட்கொண்டு விடுங்கள். ஒருசமயம் அடுத்த வேளைக்கான மருந்தை உட்கொள்ள வேண்டிய காலகட்டம் வந்துவிட்டால் வழக்கமான அளவை உட்கொள்ளுங்கள். மருந்தின் அளவை இரட்டிப்பாக்காதீர்கள்.

## என்னுடைய மருந்துகளை எப்படி பாதுகாக்க வேண்டும்?

- வேறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தாலன்றி மருந்தை வெப்பம் குறைவான, ஈரமற்ற இடத்திலும் நேரடி சூரிய ஒளிபடாத இடத்தில் வைக்கவும்.
- அதற்குரிய ஒட்டுவில்லையுடைய உரைகலத்தில் வைத்திருங்கள். வெவ்வேறு விதமான மருந்துகளை ஒரே உரை, கலத்தில் சேர்த்து வைக்கக்கூடாது.

*காலாவதியான அல்லது இனியும் தேவைப்படாத மருந்துகளை ஒதுக்கி விடுங்கள்*

SingHealth

Ministry Of Health

National Healthcare Group

Printed in 2002